# அருள்மொழிவர்மனின் பண்பு நலன்கள்

14

முனைவர் தி.சுமதி
பேராசிரியை, யோகத்துறை,
அதியமான்மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
(பெரியார் பல்கலைக் கழகத்துடன் இணைவு பெற்றது).
ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி தமிழ்நாடு,இந்தியா.

**ஆய்வுச் சுருக்கம்**: அருள்மொழிவர்மனின் தனிப்பட்ட திறமைகள், சத்திய தர்ம சிந்தனைகள், அவரது கருணை உள்ளம், வீர செயல்கள் ,கவி புலமை ,நேர்மை தன்மை ,நகைச்சுவை உணர்வு போன்ற பண்பு நலன்களை ஆய்வு கட்டுரையின் வாயிலாக ஆராய்ந்து உரைக்கப்படுகிறது.

**திறவுச்சொற்கள்** :அபாண்டம், வீராதி ,அதீதம் ,பாய் மரம்

**முன்னுரை:**

பொன்னியின் செல்வன் புதினத்தில் வருகின்ற சோழர்குல இளவரசன் அருள்மொழிவர்மன் ஆவார். வரலாற்று நாயகனான இராஜராஜ சோழனை தமது பொன்னியின் செல்வன் என்ற புதினத்தில் அருள்மொழிவர்மனாக சற்றே புனைவுடன் இக்கதாபாத்திரத்தை கல்கி வடிவமைத்து உள்ளார். சோழர்களின் வரலாற்றை ஒட்டியே பின்னபட்ட கற்பனைக் காவியமே பொன்னியின் செல்வனாகும். இந்நாவலில் 55 கதாபாத்திரங்கள் இட பெற்று இருக்கின்றன. இதில் குறிப்பிடதக்க கதாபாத்திரங்களில் ஒன்று அருள்மொழிவர்மன் ஆவார்.இக்கதாபாத்திரத்தையே இக்கட்டுரை நாயகனாக எடுத்தாளப்படுகிறது. அருள்மொழிவர்மனின் பண்புநலன்களை குறித்து ஆராயப்படுகிறது.

**பொன்னியின் செல்வன் பெயர்க் காரணம்:**

சுந்திரசோழனுக்கும் வானவன் மாதேவிக்கும் மகனாக பிறந்தவர் அருள்மொழிவர்மன் ஆவார். இவரது சகோதரர் ஆதித்த கரிகாலன், சகோதரி இளையபிராட்டி குந்தவை நாச்சியாராவார். “ஒருசமயம் இவர்கள் அனைவரும் காவிரி நதியில் பயணிக்கும்போது இளவரசர் ஆற்றில் தவறி விழுந்து விடுகிறார். அவரை காப்பாற்றியது யார் என்று அறிந்திருக்கவில்லை. ஆனால் அருள்மொழிவர்மன் மட்டும் அந்த மங்கையின் முகத்தை நினைவு வைத்துள்ளார். அனைவரும் இளவரசை காப்பாற்றியது பொன்னிநதி தான் என்று முடிவுக்கு வந்துவிட்டனர். அன்றைய

நாளிலிருந்து அருள்மொழிவர்மனை பொன்னியின் செல்வராக மக்களால் அழைக்கப்பட்டனர்”[1]. இந்நிகழ்ச்சியே பெயர் காரணமாக அமைந்துவிட்டது.

**அருள்மொழிவரின்பண்பு நலன்கள்:**

இலங்கையில் புத்தசங்கத்தார் அனைவரும் கூடி இருக்கும் அவையில் அருள்மொழிவர்மன் பின்வருமாறு கூறுகிறார்,

“மகாகுரு!தேவர்கள் சக்தி வாய்ந்தவர்கள் அவர்கள் சித்தப்படி நடத்திக்கொள்ளுங்கள்.ஆனால் அடியேனுக்கு இப்போது இடும்பணி யாது? என்று விளக்கவில்லையே.”[2]

இக்கூற்றிலிருந்து அருள்மொழிவரின் பணிவுத்தன்மை புலப்படுகின்றது. மேலும் புத்தபிட்சுக்கள் அருள்மொழிவர்மனை சிம்மாசனத்தை ஏற்றுக்கொள்ளும்படி கேட்கின்றனர். அப்போது அருள்மொழிவர்மன் பின்வருமாறு எடுத்தியம்புகிறார்.

“ஆம் என் தந்தை நோய்வாய்ப் பட்டுப் படுத்த படுக்கையில் இருக்கிறார்.கால்களின் சுவாதீனத்தை இழந்திருக்கிறார்.ஆயினும் அவருடைய பெயரால் அவரிடம் அதிகாரம் பெற்று, சோழநாட்டை ஆளுவோரில் நான் உட்பட்டவன். அவர்களுடைய கட்டளையின்றி நான் இந்தச் சிங்கானத்தை ஏற்றுக்கொண்டால் தேசதுரோகியும், ராஜதுரோகியும் ஆவேன்.”[3]

இவற்றிலிருந்து அருள்மொழிவர்மனின் நேர்மைத்தன்மையை அறியமுடிகிறது. ஆயிரம் ஆண்டுகளாய் அரசர்களைச் சிருட்டித்த சிங்காதனம், இலங்கை இராஜவம்சத்தை சேர்ந்த மன்னர்கள் அனைவரும் சிங்காதனத்தில் அமர்ந்து மணி மகுடத்தை அணிந்து செங்கோலைக் கையில் தரித்த முடிசூடிய சிங்காதனத்தை புத்தபிட்சுகள் அளிக்க முன் வந்தும் அந்த மன்னர் பதவியை ஏற்க மறுத்தார் அருள்மொழிவர்மன்.

**சத்திய தர்ம சிந்தனை:**

அருள்மொழிவர்மனை நோக்கி, எந்தப்பெண்ணைக் காதலிக்கிறீர்கள்? அவ்விதம் தாங்கள் சிம்மாசனம் ஏறுவதற்குக் குறுக்கே நிற்கும் பெண் யார்? என்று வந்தியத்தேவன் கேட்கிறான்.அதற்கு பதில் கூறும் விதமாக பின்வருமாறு எடுத்துரைக்கிறார் அருள்மொழிவர்மன்.

“ஒருபெண்அல்ல,இரண்டு பெண்கள் சத்தியம், தர்மம் என்னும் இருபெண்களை நான் காதலிக்கிறேன்.அவர்களுக்காகவே இலங்கை மணிமகுடத்தை வேண்டாம் என்றேன்.”[4]

என்ற கூற்றிலிருந்து அருள்மொழிவர்மனின் சத்திய தர்ம சிந்தனைகள் மேலோங்கி நிற்பதைக் காணமுடிகிறது.

**பொன்னியின் செல்வரின் வீரச் செயல்கள்:**

பொன்னியின்செல்வரின் வீரத்தை போற்றும் விதமாக கல்கி ‘**இதோயுத்தம்**’என்ற அத்தியாத்தில் பின்வருமாறு எடுத்தியம்புகிறார்.

“அருள்மொழிவர்மனின் இருகைகளிலும் கத்தியை சுழற்றிய போது அவரைப் பார்த்தால் அரண்மனையில் சுகபோகங்களில் வளர்ந்த கோமள சுபாவம் படைத்த ராஜகுமாரனாகத் தோன்றவில்லை பழைய காலத்து வீராதி வீரார்களான பீமனையும், அர்ச்சுனனையும் அபிமன்யுவையும் போல் விளங்கினார். இன்னும் திருமேனியில் தொண்ணூற்றாறு புண் சுமந்த விஜயாலய சோழரையும் ,யானை மேல் துஞ்சியவரான இராஜாதித்த தேவரையும் ஒத்து, அவர்களுடைய வழியில் வந்தவர் தாம் என்பதை ஞாபப்படுத்துமாறு வீரகம்பீரத் தோற்றத்துடன் திகழ்ந்தார்”[5]

என்று அருள்மொழிவர்மனின் வீரத்தினை பரைசாற்றுகின்றார் கதை ஆசிரியர் கல்கி.

**கவிப்புலமை:**

பொன்னியின் செல்வர் பூங்குழலியை பார்த்து தன்னை நினைவிருக்கிறதா என்று வினவுகிறார். எத்தனை ஜன்மங்களிலும் தங்களை மறக்கமுடியுமா? நன்றாக நினைவிருக்கிறது என்கிறாள் பூங்குழலி. அதற்கு பொன்னியின் செல்வர் பூங்குழலியைப் பார்த்து,

“ஆகா!சமுத்திரகுமாரி,நீ வாய் திறந்து பேசுகிறாயே! இந்த அதிசயனான இலங்கைத் தீவிலே உள்ள எத்தனையோ மணிமாட மண்டபங்களின் தூண்களில் அழகிய தேவ கன்னிகைகளின் சிலைகளை அமைத்திருக்கிறார்கள்.ஒருவேளை அத்தகைய சிலை வடிவமோ நீ, என்று நினைத்தேன். நல்லவேளையாக நீ வாய் திறந்து பேசுகிறாய் இன்னும் சில வார்த்தைகள் சொல்! உன் இனிய குரலைக் கேட்க எனக்கு எவ்வளவோ ஆசையாயிருக்கிறது.”[6]

என்று கேட்கிறார். இக்கூற்றிலிருந்து பொன்னியின் செல்வரின் கற்பனைத் திறனையும் கவிபுலமையும் எடுத்தியம்புகிறார் கல்கி. மேலும் கற்பனைத்திறனுக்கு சான்றாக,

“தேன்குடத்தில் முழுகிய இருவண்டுகள் மூச்சுத் திணறிக் கொண்டிருந்தன.பூங்குழலியின் கண்களும் இப்போது இத்தகைய சௌகரியமான நிலையில் இருந்தன.இளவரசரின் முகசௌந்தரியமாகிய தேனை அவை பருகித் திளைத்தன.”[7]

போன்ற வரிகளின் மூலமாக ஆசிரியரின் கற்பனை திறனை. அறிந்து கொள்ளமுடிகிறது. ஒவ்வொரு இடத்திலும் அருள்மொழிதேவரின் எண்ணங்களை மனதைபடிக்கும் விதமாக நல்லதொரு கதைமாந்தராக படைத்திருக்கிறார் ஆசிரியர்.

**கருணையுள்ளம்:**

இருளையும் மழையையும் கிழித்துக் கொண்டு எல்லா திசைகளிலும் பேரிடியும் மின்னலுமாக இருந்தன. விரிந்த பாய்மரங்களுடன் கூடிய கப்பல் பேயாடுவது போல் ஆடிக் கொண்டிருந்தது. அதன் உச்சி தீப்பற்றி எரிந்து கொண்டிருந்த இடத்தில் வந்தியதேவன் செய்வதறியாது நின்று கொண்டிருந்தான். கடல் மிகப் பெரிய கொந்தளிப்புடன் காணப்பட்டது. வானளாவி அலைகள் எழுந்துகொண்டிருந்தன. எரிகின்ற கப்பலில் உள்ளவர்களை காப்பாற்ற போக வேண்டாம் என பார்த்திபேந்திரன் பொன்னியின் செல்வரை தடுக்கிறான். அதற்கு பதிலளிக்கும் விதமாக அருள்மொழிதேவர் பின்வருமாறு,

“ஜாக்கிரதை, இச்சமயம் என்னைத் தடுக்க பார்க்கிறவர்களை நான் ஒருநாளும் மன்னிக்கமுடியாது”[8] என்று கூறுகிறார். இச்சம்பவத்தில் இருந்து அருள்மொழிவர்மரின் கருணையுள்ளம் புலப்படுகிறது.

**நகைச்சுவையுணர்வு:**

நடுக்கடலில் படகு தொட்டில் ஆடுவது போல் ஆடிக்கொண்டிருந்தது. அருள்மொழிவர்மர், வந்தியதேவர், பூங்குழலி ஆகியோர் கடலில் பயணித்துக் கொண்டிருந்தார்கள். கோடிக்கரையை நோக்கி படகு சென்று கொண்டு இருந்தது. படகினை பூங்குழலி மட்டுமே துடுப்பு வலித்துக் கொண்டு இருந்தாள். இதை கண்ட வந்தியதேவன்,

“தனியாக பூங்குழலி எவ்வளவு நேரம் துடுப்பு வலிப்பாள்? நான் கொஞ்சம் தள்ளிப் பார்க்கிறேன். இங்கே கொடு அம்மா, துடுப்பை” [9] என்கிறான் வந்தியதேவர். வந்தியதேவனின் எண்ணத்தை அறிந்து கொண்ட அருள்மொழிவர்மன் புன்னகையோடு பின்வருமாறு உரைக்கிறார்.

“நண்பனே! உன்னுடைய சூழ்ச்சிகள் எல்லாம் வீண் தான். நான் பழையாறைக்கும் போகப் போகிறதில்லை. தஞ்சாவூர்ரையும் பார்க்கப் போகிறதில்லை. கடவுள் என்னைக் கைலாசத்துக்கே அழைத்துக் கொண்டு போய்விடுவார் போலிருக்கிறது” [10] என்று அருள்மொழிவர்மன். மேற்கூறிய கூற்றிலிருந்து நகைசுவையுணர்வினை அறிந்து கொள்ளமுடிகிறது.

**நேர்மைதன்மை**:

முதல் மந்திரி அநிருத்தனர் பல்லக்கில் இருந்து இறங்கி வந்து, வானதியை சந்திக்கிறார், அருள்மொழிவர்மனை பற்றி கேட்கிறார். அருள்மொழிவர்மனை மறைத்துவைத்தல் என்பது இராஜகுற்றமாகும். இதனால் நீ இராஜதுரோகத்தை

செய்கிறாய் என வானதியை எச்சரிக்கை செய்கிறார் அநிருத்தனர். வானதி அவரின் பேச்சுகளை பொறுக்க **முடியாமல், பின்வருமாறு**

“ஐயா, தாங்கள் கூறியது ஒன்றும் உண்மையில்லை, அருள்மொழிவர்மன் மீது வீண் அபாண்டம் கூறினீர்கள். பொன்னியின் செல்வர் தான் இலங்கையில் நம் வெற்றிக்கு காரணமானவர் என்பது உலகறிந்த உண்மை. இவருடைய வீரத்தையும் மற்ற குணாதிசயங்களையும் பார்த்து இலங்கை மக்கள் அவர்மீது அன்பு கொண்டார்கள். புத்தகுருமார்கள் இலங்கை சிம்மாசனத்தைப் பொன்னியின் செல்வருக்கு அளித்தார்கள். இளவரசரோ சிம்மாசனம் தமக்கு வேண்டாம் என்று மறுத்தளித்தார். அத்தகைய நேர்மையானவரைக் குறித்து அவதூறு வேண்டாம்”[11] கூறுகிறாள் வானதி.

இளவரசர் பொன்னியின் செல்வர் தந்தையின் கட்டளையை அறிந்தும் தாமே சிறைப்பட்டு தஞ்சைக்கு வந்தடைந்தார். அவர் வேண்டு மென்றே கடலில் குதிக்கவில்லை. சிநேகிதரின் உயிரைக் காப்பாற்றுவதற்காகவே குதித்தாக கல்கி வானதி வாய்மொழி வாயிலாக தெரிவிக்கிறார். இச்சம்பவம் பொன்னியின் செல்வரின் நேர்மைத் தன்மைக்கு சான்றாக அமைவதை காணமுடிகிறது

**முடிவுரை:**

பொன்னியின் செல்வன் கதையில் மகுடம் வைத்தாற் போல் அருள்மொழிவர்மனின் ஒப்பற்ற தியாகத்தை குறிப்பிடலாம். இக்கதைக்கு சிகரமாக அமைவது அருள்மொழிவர்மன் தமது சாம்ராஜ்யத்தை தியாகம் செய்தார் என்பது உற்றுநோக்கதக்கது. இக்கதையில் முக்கியமானது, சரித்திரத்தில் ஒப்பற்ற சம்பவமாக கொண்டாடப்படுவது, தமது இளம் வயதில் தாம் பெற்ற சோழ சாம்பிராஜ்ஜியத்தை வேண்டாம் என்று மறுத்து விட்டு உத்தமசோழனுக்குப் பட்டம் கட்டிவைத்தார் என்பது முக்கிய செய்தியாகும். இந்த நிகழ்ச்சிகள் செப்பேடுகள், கல்வெட்டுகள் இராஜராஜசோழனின் தியாகத்தை பரைசாற்றுகின்றன. இக்கட்டுரையின் வாயிலாக அருள்மொழிவர்மனின் பண்புநலன்களை அறியமுடிகிறது.

**தொகுப்புரை:**

சுந்திரசோழனுக்கு மகனாகவும், ஆதித்திய கரிகாலசோழன் மற்றும் குந்தவை தேவியின் தம்பியாகவும், அருள்மொழிவர்மன் என்ற கதாபாத்திரத்தை கல்கி கொண்டுசெல்கிறார்.யானை மீது அன்பு கொண்டவராகவும், யானைகளை கட்டுப்படுத்தும் திறன்மிக்கவராகவும், ஓவியம் மற்றும் சிற்பகலை மீது அதீத விருப்பம் நிறைந்தவராகவும், மற்றவர்கள் கருத்துக்கு மதிப்பளிப்பவராகவும், எதனையும் ஆராய்து முடிவெடுப்பவராகவும், மூத்தோர்களின் முதுமொழி கருத்துக்களுக்கு இடம்

கொடுப்பவராகவும், அருள்மொழிவர்மன் என்ற கதாபாத்திரத்தை கல்கி வடிவமைத்துள்ளார் என்பது ஆய்வுக் கட்டுரையின் வாயிலாக அறியமுடிகிறது.

**அடிக்குறிப்புகள்:**

1. பொன்னியின்செல்வன்: பாகம் 2, பக்கம் -257
2. மேலதுபாகம் 2, பக்கம் -247
3. மேலதுபாகம் 2, பக்கம் -247
4. மேலதுபாகம் 2, பக்கம் -249
5. மேலதுபாகம் 2, பக்கம் -271
6. மேலதுபாகம் 2, பக்கம் -295
7. மேலதுபாகம் 2, பக்கம் -297
8. மேலதுபாகம் 2, பக்கம் -386
9. மேலதுபாகம் 3, பக்கம் -39
10. மேலதுபாகம் 3, பக்கம் -39
11. மேலதுபாகம் 3, பக்கம் -306

**துணைநூற்பட்டியல்:**

கல்கியின்பொன்னியின்செல்வன்: (பாகம்1,2,3,4,5)
திருமகள்நிலையம்,சிவபிரகாசம்சாலை,
தி.நகர்,சென்னை-600017.ஐந்தாம்பதிப்பு,2013